**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2015/ 2016 (December 2019)**

**GYS 2243 புவியியற் சிந்தனை வரலாறும் நுட்பங்களும் (Geographical Thoughts and Methodology)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

உலக புறவரிப்படம் வழங்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. அ. மத்தியதரைக் கடல் பிரதேசத்தினை வரைந்து அங்கு காணப்பட்ட ஆரம்பகால மக்கட் குடியிருப்புக்களை குறித்து நிறம் தீட்டி காட்டுக. (08 புள்ளிகள்)

   ஆ. மத்திய தரைக்கடற் பிரதேசத்தில் வாழ்ந்த ஆரம்பகால மக்கள் இனக் குழுக்கள் தாம் வாழ்ந்த இடங்களில் இருந்து நகர்வுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருந்த காரணிகளை விளக்குக. (12 புள்ளிகள்)

2. அ. ஹோமரினால் வரையப்பட்ட திருத்திய மூன்றாவது உலகப்படத்தினை நிறம்தீட்டிவரைந்து காட்டுக. (08 புள்ளிகள்)

   ஆ. புவி தொடர்பாக ஹோமர் கொண்டிருந்த கருத்துக்களை விளக்குவதுடன் அக்கருத்துக்கள் எந்தளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன என்பதனை ஆராய்க. (12 புள்ளிகள்)

3. அ. புவியியலில் விஞ்ஞான முறைகளின் பிரயோகத்தினை தூண்டிய காரணிகளை சுருக்கமாக குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

ஆ. புவியியலில் விஞ்ஞான முறைகளின் பிரயோகம் காணப்படும் பிரதான நா
பகுதிகளை உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்

இ. வகைப்பாடுகளும் பிரதேசமயமாக்கமும் புவியியலில் எவ்வாறு முக்கியத்
பெறுகின்றன என்பதனை விளக்குக. (08 புள்

## பகுதி 11

4. புதிய உலகினை கண்டறிவதற்காக கொலம்பசினால் மேற்கொள்ளப்பட்ட கடல் பாதைகளை உலக புறவரிப்படத்தில் வரைந்து காட்டி அவரது கடற் பய எந்தளவிற்கு முழுமையான ஒரு உலகினை அறிந்து கொள்வதற்கு உ அமைந்தது என்பதனை விளக்குக.

(20 புள்

5. புவியியற் சிந்தனை வரலாற்றுக் காலங்களில் காணப்பட்ட மதங்களுக்கிடை போட்டி மற்றும் முரண்பாடுகள் எந்தளவிற்கு புவியியற் சிந்தனை தொடர்பான முழுமையான தகவல்களை தெரிந்து கொள்வதில் பாதிப் உண்டு பண்ணியுள்ளன என்பதனை ஆராய்க.

(20 புள்

6. “புவியியற் சிந்தனை வரலாற்றில் அராபியர் காலம் ஒரு பொற்காலம்” இக் பொருத்தப்பாட்டினை தகுந்த ஆதாரங்கள் கொண்டு நிருபிக்குக. (20 புள்

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் இரண்டினிற்கு சிறு குறிப்பெழுதுக.
   1. படவரைகலையியலில் நவீன தொழில் நுட்பம்
   2. ஹெக்காட்டசின் புவியியல் தொண்டு
   3. ஒற்றை அம்சப் பிராந்தியம்

(10 X 2 = 20 புள்